ஆறுகளின் கரைகளை ஆண்டுக்கு ஒருமுறை செப்பனிட நடவடிக்கை!

சட்டப்பேரவையில் - அமைச்சர் துரைமுருகன் உறுதி!

சென்னை, ஏப். 2- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

செ.ராஜேஷ் குமார்: சிற்றாறு பட்டணங்கால் தொடர்ந்து மோசமாக இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய shutter எல்லாம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. tail end கடைவரம்பு நிலங்களுக்கு தண்ணீர் வரவில்லை. அங்கு இருக்கக்கூடிய குளங்களையும் இந்த முறை நிரப்ப முடியவில்லை. அதைப் போர்க்கால அடிப்படையில் தூர்வாரி உடைந்த shutter களை எல்லாம் சீர் செய்துதர முடியுமா?

அமைச்சர் துரைமுருகன்: உறுப்பினர் அவர்களின் கோரிக்கை சரியானது தான்; பட்டணங்கால் மட்டுமல்ல கோதையாறும் அப்படித்தான் இருக்கிறது. மற்ற அணைகளும் அப்படித்தான் இருக்கின்றன. கடந்த பெரும்புயலில் கரைகள் எல்லாம் அடிக்கப்பட்டது. ஆகையினால் பொதுவாக ஆறுகளில் எல்லாம் மீண்டும் கரைகள் கட்ட வேண்டுமென்பது எனக்கு சரியாக கோரிக்கை தான்.

முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, நிதி நிலைமைக்கு ஏற்றபடி ஒவ்வொரு வருடத்திற்காவது ஒரு ஆற்றின் கரைகள் கட்டப்பட்டு, மீண்டும் உங்களுக்கு நீர்ப்பாசனம் சரியாக நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ்

தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டதாக கூறுவது தவறு!

அமைச்சர் ஐ.பெரியசாமி – அண்ணாமலைக்கு பதிலடி!

சென்னை, ஏப். 2- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்ட திட்டத்தின் கீழ் நிதி மற்றும் மனித சக்தி நாட்களை குறைத்து இத்திட்டத்தினை நீர்த்து போகும் நடவடிக்கைகளை தவிர்த்து, தமிழ் நாடு போல் அனைத்து மாநிலங்களையும் சிறப்பாக இத்திட்டம் செயல்பட ஒன்றிய அரசு ஊக்குவிக்க வேண்டும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்இ.பெரியசாமி அறிவுறுத்தியுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் குறித்து தமிழ் நாடு பாரதிய ஜனதா கட்சி மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்ட செய்திக்கு மறுப்பு தெரிவித்து அமைச்சர் இ.பெரியசாமி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் உத்தரபிரதேசம் போன்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டிற்கு இத்திட்டத்தின் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் கூறுவது தவறான கருத்து என அமைச்சர் தெரிவித்துள்ளார். தமிழ் நாட்டில் உள்ள மக்கள் இதர சில மாநிலங்களை ஒப்பிடுகையில் கல்வி, விழிப்புணர்வு, மாநில மற்றும் ஒன்றிய அரசு திட்டங்கள் தொடர்பான புரிதல் ஆகியவற்றை அதிகம் கொண்டுள்ளதால் இத்திட்டங்கள் மூலம் பயன்பெற்று வருகின்றனர் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உத்திரபிரதேசம், ராஜஸ்தான். பீகார் போன்ற பரப்பளவில் மற்றும் மக்கள் தொகையில் அதிகம் உள்ள மாநிலங்கள் தமிழ் நாட்டை போன்று இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி ஒன்றிய அரசிடமிருந்து அதிக நிதி பெறுவது எப்படி என அண்ணாமலை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்காமல், சிறப்பாக செயல்படும் தமிழ் நாடு அரசின் நிர்வாகத்தின் குறை கூறுவது எந்த விதத்தில் நியாயம் என்றும் அவர் வினவியுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை பொறுத்தவரை திட்டத்திற்கான நிதி என்று ஒதுக்கீடு செய்யாமல் ஒவ்வொரு மாநிலத்திலும் எத்தனை மனித சக்தி வேலை நாட்கள் என்ற அடிப்படையில் தான் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2021-22 முதல் 202425 வரையிலான 4 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஆண்டிற்கு சராசரியாக 67 லட்சம் குடும்பங்களை சேர்ந்த 77 லட்சம் தொழிலாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அதற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யாமல் ஒன்றிய அரசு ஒவ்வொரு ஆண்டும் நிதியை குறைத்து வழங்கி இத்திட்டத்தை நீர்த்துப் போகச் செய்கிறது என்று அமைச்சர் இ.பெரியசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

மேட்டுப்பாளையம் நகராட்சியில் பாதாள சாக்கடைப் பணிகள் விரைந்து முடிக்க நடவடிக்கை!

சட்டப்பேரவையில் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்!

சென்னை, ஏப்.2- சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் ஏ.கே.செல்வராஜ், "மேட்டுப்பாளையம் நகராட்சியிலே நடைபெற்று வரும் பாதாள சாக்கடைப் பணிகளில் விடுபட்ட பகுதிகளைச் சேர்த்து, விரைந்து முடித்து பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது" குறித்து வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில், அ.தி.மு.க. உறுப்பினர் ஏ.கே.செல்வராஜ், மேட்டுப்பாளையம் நகராட்சியிலே நடைபெற்று வரும் பாதாள சாக்கடைப் பணிகளில் விடுபட்ட பகுதிகளைச் சேர்த்து, பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது குறித்து வலியுறுத்தினார்.

அதற்கு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலுரை வருமாறு:

மேட்டுப்பாளையம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டமானது, நகராட்சியின் 33 வார்டுகளுக்கு 9-9-2016-ல் KfW 2016-? 2017 திட்டத்தின்கீழ் ரூ.100.07 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இத்திட்டமானது மூன்று சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று தற்சமயம் பணிகள் முடிவடைந்து, சோதனை ஓட்டத்தில் உள்ளது. மேட்டுப்பாளையம் நகராட்சி வாயிலாக 2,770 வீட்டு இணைப்புகள் கொடுக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. வீட்டு இணைப்புகள் வழங்கும் ஒப்பந்ததாரர் காலதாமதமாக பணி மேற்கொள்ளும் காரணத்தால், ஒப்பந்தப் புள்ளி இரத்து செய்யப்பட்டது. தற்போது திருத்திய நிர்வாக அனுமதி பெற்று, மறு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, 3-3-2025 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி பாதாள சாக்கடை வீட்டு இணைப்புப் பணிகள் அனைத்தும் 30-9-2025-க்குள் முடிக்கப்படும்.

மேலும், 2015 ஆம் ஆண்டு நில அளவைப்படி தயாரிக்கப்பட்ட இத்திட்டத்தினை தற்சமயம் நகரின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் புதிதாக உருவான ஒருசில குடியிருப்புப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற அப்பகுதி பொதுமக்களின் வேண்டுகோளினை செயல்படுத்த மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்றத் தீர்மான எண் 139, நாள் 27-9-2024-ல் அனுமதிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் பணிகளை மேற்கொள்ள உத்தேசி மேட்டுப்பாளையம் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக 22-5-1998 ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டது. 33 வார்டுகளையும், 7.2 சதுர கிலோமீட்டர் பரப்பளவும் கொண்ட இந்த கராட்சியின் மொத்த மக்கள் தொகை 69,123 (2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி) தற்போதைய மக்கள் தொகை சுமார் 88,247. இந்நகராட்சிக்கு

2016-2017 ஆம் நிதியாண்டில் ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு 91,70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலும் திருத்திய ஒதுக்கீடாக 2018 ஆம் ஆண்டு 100.07 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு, தற்போது இப்பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு, சோதனை ஓட்டத்தில் உள்ளது. இத்திட்டத்தில் 75 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர் சேகரிப்பு குழாய்மூலம் சேகரமாகும் கழிவுநீர், சிக்கதாசம்பாளையம் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள 8.65 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்மூலம் சுத்திகரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஏற்கெனவே 2,539 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டன. 2022-2023 ஆம் ஆண்டு முதல் ரூ.6.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7,957 இணைப்புகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இணைப்புகள் வழங்கும் பணிகள் செப்டம்பர் 2025-க்குள் முடிக்கப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இதோடு, விடுபட்ட பகுதிகளிலுள்ள சுமார் 8,000 வீடுகளுக்கு ரூ. 20 கோடி மதிப்பீட்டில் இணைப்புகள் புதைவடி குழாய்கள் அமைத்து வழங்குவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. செப்டம்பர் 2025-க்குள் அனைத்து பணிகளும் முடிந்து, பொதுமக்களுடைய பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற ஒப்பந்தங்களைப்போல் இந்த ஒப்பந்தம் இருப்பதில்லை. பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரை, படிப்படியாக மிகவும் சிரமத்து டன்தான் அப்பணியை முடிக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு முடிக்கும் போது, சில இடங்களில் மேடு, பள்ளம் ஏற்பட்டு, manhole வழியாக தண்ணீர் வெளியேறுவது இயற்கையாக தற்போது நடைபெறுகிறது. அந்தப் பணிகள் 2025-ல் முடிவடையும் போது, மற்ற அனைத்து இடங்களிலுமுள்ள manholes அடைக்கப்பட்டு, மேடு, பள்ளங்கள் இருந்தால், அவையும் சரி செய்யப்பட்டு, தண்ணீர் எந்த இடத்திலும் வீணாகாமல் செல்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். அதில் ஒன்றும் மாற்றம் இல்லை. தற்போது தற்காலிகமாக இருப்பதை மாற்றியமைப்பது குறித்து அதிகாரிகளுடன் கலந்து பேசி, அதற்கு முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பொள்ளாச்சியில் சுத்திகரிக்கப்பட்ட நீர் கொடுக்கும்போது, அந்தத் தண்ணீர் விவசாயத்திற்குத் தேவை என்று விவசாயிகள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், கிழக்கும் மேற்குமாக விவசாயத்திற்கு கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நீரும் ஆற்றில் கலக்காமல் விவசாயத்திற்குப் பயன்படுகிற வகையில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அதற்குரிய ஏற்பாட்டினைச் செய்யலாம் என்பது ஒன்று. அடுத்து, குறிப்பாக ஒன்றை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். மற்ற இடங்களில் எல்லாம் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்படாமல், வெளியில் சாக்கடை நீர் ஓடுவதால், துர்நாற்றம் வீசுகிறது, கொசு வருகிறது என்பதால்தான், மக்களுக்கு நன்மை பயக்கும்பொருட்டு, பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட்டு, சுத்திகரிப்பு நிலையம்மூலம் சுத்திகரிக்கப்பட்ட நீரை, மறுபடியும் ஆற்றில் விடுவதால் நீர் மாசுபடுகிறது என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், விஞ்ஞான முறைப்படி 100 லிட்டர் கழிவுநீரை சுத்திகரித்தால், அதில் வெறும் 6 லிட்டர், 7 லிட்டர் அளவிற்குத்தான் கழிவு போகும். எஞ்சிய 94, 93 லிட்டர் நல்ல நீராகத்தான் வரும். மற்ற நாடுகளை எடுத்துக் கொண்டால், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அந்த நீரை குடிநீராகக்கூட பயன்படுத்துகிறார்கள். எனவே, முதலில் STP அமைக்கும்போது, தங்கள் பகுதியில் நாற்றம் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். பின்னர், சுத்திகரித்துத் தரும்போது, அந்தத் தண்ணீரே வேண்டாம் என்று சொல்கிறார்கள். இவையெல்லாம் நம்முடைய மக்கள் மனதில் எழுந்திருக்கின்ற சந்தேகங்கள். அவற்றைத் தீர்க்கும் பொருட்டுத்தான் இதைச் சொல்கிறேன். எனவே, சுத்திகரிக்கப்பட்ட நீர், நல்ல நீராகத்தான் வருகிறது. அதை ஆற்றில் விட்டாலும், நேரடியாக விவசாயத்திற்குப் பயன்படுத்துவதாக இருந்தாலும், அந்தப் பகுதியிலுள்ள மக்களின் விருப்பம் என்னவோ, அதன்படி செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலுரையாற்றினார்.

பறவைகளிடத்தும் முதல்வர் காட்டும் பாசம்!

"கோடை வெயிலால் தவிக்கும் பறவைகளுக்கு நீரும் உணவும் கொடையளிப்போம்" என்று, சமூக வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டிருப்பதை அவர், காக்கைகள் உள்ளிட்ட பறவைகளுக்கு தானியமும், தண்ணீரும் வார்த்திடும் படத்துடன் சில நாளேடுகள் இன்று செய்தியாக வெளியிட்டுள்ளன. இதைக் காண்போர்தம் இதயம் நிச்சயம் அசைந்து கசிந்துருகும்; பன்முகத் தோற்றம் கொண்ட முதல்வரின் மற்றொரு முகம் 'பளிச்'செனத் தெரியும். பறவைகளிடத்து அவர் கொண்டுள்ள அக்கறையும், அக்கறையில் பிறந்த பேரன்பும், பாசமும் விளங்கும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காக்கைகளுக்கு உண்ண உணவும், அருந்த நீரும் வழங்கிடும் படத்தைப் பார்க்கும்போது, முத்தமிழறிஞர் கலைஞர், **"பராசக்தி"** திரைப்படத்திலே அமைத்திருந்த அருமையான காட்சி ஒன்று, கண்களின் நினைவினிலே மெல்ல நகர்ந்து செல்வதைத் தொடாமல் தவிர்க்க முடியாது. அந்தக் காட்சியில், காக்கைகளுக்கு உணவூட்டியவாறே நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பாடியது, செவிகளின் கரையோரம் தென்றலாய் மோதிச் செல்வதை உணராதிருக்க முடியாது.

உடுமலை நாராயண கவிராயர் இயற்றிய பாடல் அது; இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் கணீர்க் குரலில் பாடிய பாடல்:

கா கா கா கா கா கா
ஆகாரம் உண்ண எல்லோரும் ஒன்றாக
அன்போடு ஓடிவாங்க என்ற
அனுபவப் பொருள் விளங்க
காக்கை அண்ணாவே நீங்க அழகான வாயால்
பண்ணாகப் பாடுறீங்க காக்காவென
ஒண்ணாகக் கூடுறீங்க!

சாப்பாடில்லாமே தவிக்குதுங்க ஜனங்
கூப்பாடு போட்டுமனம் குமுறுதுங்க உயிர்
காப்பாத்தக் கஞ்சித் தண்ணி ஊத்துங்க, என்றால்
தாப்பாளப் போடுறாங்க பாருங்க !

எச்சிலைதனிலே எறியும் சோத்துக்கு
பிச்சைக்காரர் சண்டை ரோட்டிலே
இளைத்தவன் வலுத்தவன் இனச்சண்டை
பணச்சண்டை
எத்தனையோ இந்த நாட்டிலே;

பட்சி சாதி நீங்க, எங்க பகுத்தறிவாளரைப்
பாக்காதீங்க,
பட்சமா இருங்க பகுந்துண்டு வாழுங்க
பழக்கத்த மாத்தாதீங்க !

என்ற அந்தப் பாடலில் பகுத்தறிவு, பசி பட்டினி பஞ்சம், பறவைகளிடையே வேற்றுமையற்ற ஒற்றுமை போன்ற நிலைமைகள் நெய்யப் பட்டிருந்தது; தமிழர் சமூகத் தெருக்களில் அன்று இந்தப் பாடல் வரிகள் எதிரொலித்தன!

இன்று காக்கைகள் உள்ளிட்ட பறவைகளின் மீது ஆழ்ந்த இரக்கம் கொண்டு, நெருப்பை இறைக்கும் இப்போதைய வெய்யிலில், முதல்வர் உணவும், நீரும் வழங்கும் காட்சி, ஏராளமான இலக்கிய வரிகளை எண்ணத்தில் கோடிட்டுக் காட்டுகிறது!

"காக்கை குருவி எங்கள் ஜாதி; நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்" என்றும்; "காக்கைச் சிறகினிலே நந்தலாலா நின்றன் கரியநிறம் தோன்றுதைய்யே நந்தலாலா !" என்றும் மகாகவி பாரதி காக்கைகளைக் கொண்டாடினான். அந்தக் கொண்டாட்டத்தை, முதல்வரும் காக்கைகளும் உள்ள படம் மனக்கண் முன்னே கொண்டுவருகிறது !

அய்யன் திருவள்ளுவர், **" காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் அன்னநீ ரார்க்கே உள (தனக்குக் கிடைத்ததை மறைக்காமல், தனது சுற்றத்தைக் கூவி அழைத்துக் காக்கை உண்ணும். அந்தக் குணம் உடையவர்களுக்கு மட்டுமே உலகில் உயர்வு உண்டு)"** என்று காக்கையின் குணநலத்தைக் குன்றேற்றிப் புகன்றார். இந்தப் படத்தின் பின்னணியில் அந்தக் குறள் இழையோடிக் கொண்டிருப்பதைக் கண்டு களிக்கலாம்!

" சேயிறா வெறிந்த சிறுவெண் காக்கை" என்று நற்றிணையில் காக்கையின் பண்பு போற்றப்படுகின்றது. சீறிப்பாயும் கடல் அலையிடத்தே இறால் மீனைப் பிடித்து வந்த காக்கையொன்று, அதைத் தான்மட்டும் தனித்துண்ண மனமின்றித் தன் பெடைக்கும் கொடுக்க விரும்பி, பெடையை அழைத்து, அதன் வாயில் தானே கொடுத்து மகிழும் நல்லழகுக் காட்சி, நற்றிணையைக் கற்ற யார்க்கும் கண்ணில் நிறைந்திருக்கும் !

" மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை"யை அழைத்து, கிளையோடு உண்ணும் அதன் அன்புடை மரபினைப் பாராட்டும் ஐங்குறுநூறுப் பாடலும், இன்ன பிற சங்கப் பாடல் வரிகளும், காக்கைகளின் ஒற்றுமை,நல்லிணக்கம், பகுத்துண்ணும் மாப்பண்பு ஆகியவற்றை நாமணக்கப் பகர்கின்றன.

முதல்வரும், காக்கைகளும் இருக்கும் படம், நமது முன்னோரின் அறிவார்ந்த சொற்களுடன், நமக்கு மேலும் பல நற்செய்திகளை எடுத்து வைக்கின்றன !

** ** **

கி.இராஜமாணிக்கம்

** ** **